## ஒப்பற்ற தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மீண்டும்

# திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய முழு பங்களிப்பை செலுத்தி வெல்வோம் ஒன்றாக!

### கடலூர் கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சிறப்புரை!




கடலூர், பிப். 2 -

கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம், 31.01.2026, சனிக்கிழமை மாலை 4 மணியளவில், குறிஞ்சிப்பாடி கழக அலுவலகத்தில், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைப் பெற்றது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

கோ.ஐயப்பன் எம்.எல்ஏ., முன்னாள் எம்.எல்.ஏக்கள்., துரை.கி.சரவணன், வி.சி.சண்முகம், தொகுதி பார்வையாளர்கள் சுவை.சுரேஷ், விஜயன் ராமகிருஷ்ணன், எம்.எம்.சிவா, அ.பாரிபாலன், மாவட்ட கழக துணை செயலாளர்கள்: அ.ஞான முத்து, ஆர்.சக்திவேல், சுதா சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அது வருமாறு:-

**தீர்மானம் 1:**

வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரை பயணத்தை கடலூர் கிழக்கு மாவட்டத்தில் 100% முழுமையாக வெற்றி பெற செய்தல், தமிழ்நாட்டில் பெண்ணுரிமைக்கான ஆட்சியாக பெண்கள் கேட்காமலேயே அவர்களின் தேவைகளை நிறைவேற்றும் ஆட்சியாக நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியில், ஒவ்வொரு குடும்பமும் பயன்பெறும் வகையில் எண்ணற்ற நலத்திட்டங்களைக் நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் வீடு வீடாகச் சென்று பரப்புரைச் செய்யும் கடமை வீராங்கனைகளாக வெல்லும் தமிழ் பெண்களின் பரப்புரை பயணம் நாளை தொடங்கி (பிப்ரவரி 1 முதல் மார்ச் 8 மகளிர் தினம் வரை நடக்கப் போகிறது.

திராவிட மாடல அரசின் தாயுமானவராக விளங்கும் கழகத் தலைவர் முதல்வர் தளபதியின் மகத்தான மகளிர் நலத் திட்டங்களை எடுத்துச் சொல்லும் அதே வேளையில் எதிரணியினரின் பொய்ப் பிரச்சாரங்களையும் முறியடிக்கும் வகையிலும் இந்த பரப்புரை பயணம் அமைய உள்ளது. இந்த வரலாற்று சிறப்புமிக்க பரப்புரை பயணத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக மகளிர் அணியினர், மகளிர்கள் பல்வேறு துறைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற மகளிர், விளையாட்டு வீராங்கனை கள், மகளிர் தொழிலாளர்கள் அனைவரும் வெல்லும் தமிழ்ப்பெண்களாக புறப்படுங்கள்! மீண்டும் ஒப்பற்ற கழகத் தலைவர் முதல்வர் தளபதி தலைமையில் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய 100% முழு பங்களிப்பை செலுத்தி உழைத்து வெல்வோம் ஒன்றாக! என்று போற்றக்கூடிய வகையில் கடலூர் கிழக்கு மாவட்டத்தில் வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரை பயணம் அமையும் என்று தீர்மானி க்கப்படுகிறது.

**தீர்மானம் - 2 :**

நம் கழகத்தின் மகத்தான வெற்றியை பறை சாற்றப் போகும் இந்த தேர்தலில் தேர்தல் அறிக்கை என்பது கதாநாயகனாக மட்டுமல்லாமல் இந்த முறை கதாநாயகியாகவும் இருக்கும் என்ற அறிவிப்பு தமிழக மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

**தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவினருக்கு சிறப்பான வரவேற்பு!**

தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவினர் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையில் வடலூரில் தங்கள் பணிகளை மேற்கொள்ள உள்ளது. நம் உழவர் நலன் வேளாண் துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் அக்குழுவினருக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது என்று தீர்மானிக்கப்படு கிறது.

மேலும் நம் மாவட்டத்திற்கு தேவையான கோரிக்கைகள் திட்டங்கள் புதிய யோசனைகள் கருத்துருக்களை கழகத்தினர் அக்குழுவிடம் நேரில் மனுவாக அளிப்பதோடு இத்தகவலை மக்கள் மத்தியில் எடுத்துரைத்து அவர்கள் கருத்துகளையும் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் தெரிவிக்க நடவடிக்கை எடுப்பது என்று தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் - 3**

**"என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சி மாநாடு!**

கழகத் தலைவர் அவர்களின் திட்டமிடலின்படி வருகின்ற சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகை யில் பல்வேறு முன்னெடுப்பு களை கழகம் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் கழத்தின் வெற்றியை உறுதி செய்யும் வகையில், "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" வாக்குச்சாவடி குழுவினருக்கான பயிற்சி மாநாடு வருகிற 1122026 அன்று நடக்க உள்ளது.

இக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த வாக்குச்சாவடி கழக குழுவினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். அத்துடன் சட்டமன்ற உறுப்பபினர்கள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்களும் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தீர்மானம் - 4**

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி ஆணைக்கிணங்கவும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரிலும் கழகம் அறிவுத்துள்ள நட்சத்திர பேச்சாளர்கள் பங்கேற்கும் தமிழ்நாடு தலைகுனியாது தொகுதி பரப்புரை கூட்டங்கள் கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் நடைபெற உள்ளது. ஒவ்வொரு கூட்டத்தையும் மாநாடு போல் எழுச்சிகரமாக நடத்துவது என்று தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் 5**

**கழகத் தலைவர் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!**

திராவிடர் காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற மகத்தான திராவிட நாயகர் உலகம் போற்றும் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அனைத்து துறைகளிலும் தமிழ்நாட்டை முதல் இடத்திற்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிற மகத்தான கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாளில் ( மார்ச் 3) கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் அனைத்து வட்டங்கள் நகராட்சி மாநகராட்சி ஊராட்சி பேரூராட்சி பகுதிகளில் கொடியேற்றுதல், நலத் திட்ட உதவிகள் வழங்குதல், அன்னதானம் ரத்த தான முகாம்கள், மரக்கன்றுகள் நடுதல், ஏழை எளியவர்களுக்கு புத்தாடை வழங்குதல், மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகங்கள் வழங்குதல் ஆகியவற்றை செய்து மக்கள் விழாவாக கொண்டாடுவதென்று தீர்மா னிக்கப்படுகிறது.

**தீர்மானம் - 6:**

08.03.2016 அன்று நடக்கவுள்ள "ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்" என்ற மாபெரும் கழக மாநாட்டில் பல்லாயிரக்கணக்கான கடலூர் கிழக்கு மாவட்ட கழக வீரர்கள் கழக இளைஞர் அணி மகளிர் அணி உள்பட அனைத்து அணிகளை சேர்ந்தவர்களும் பங்கேற்பது அதன் தொடர்ச்சியாக கடலூர் கிழக்கு மாவட்டத்தில் அனைத்து தொகுதிகளிலும் கழகம் மற்றும் கூட்டணி கட்சிகளின் வெற்றியை கழகத் தலைவரிடமும் கழக இளைஞரணி செயலாளரிடமும் மாவட்டக் கழகச் செயலாளர் உழவர் நலன் வேளாண் துறை அமைச்சர் மாண்புமிகு எம் ஆர் கே பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் சமர்ப்பிப்போம் என்று உறுதியற்று தீர்மானம் நிறைவேற்றப்படு கிறது.

**தீர்மானம் 7**

தமிழ்நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க போகும் தேர்தல் என்பதால் கடலூர் கிழக்கு மாவட்ட கழகத் தொண்டர்கள் செயல்வீரர்கள் கழக இளைஞர் அணியினர் மகளிர் என அனைத்து அணியினரும் தமிழ்நாட்டை வீழ்த்தி விட வேண்டும் என்று திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கும் மதவெறி சனாதன பகைவர்கள் மற்றும் அதற்கு அடிமை சேவகம் செய்யும் துரோக கூட்டத்தின் பொய் பிரச்சாரங்களை முறியடித்து தவிடு பொடியாக்கவும்

அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி சூப்பர் திராவிட மாடல் தமிழ்நாடு அரசாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்களை வீடு வீடாக கொண்டு சேர்க்கவும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை', 'இன்னுயிர் காப்பீடு', 'புதுமைப் பெண்', மகளிர் உரிமை பேருந்து பயணம் உள்பட அனைத்து திட்டங்களின் பயன்பாடுகளை பட்டியலிட்டு விளக்கப் பிரச்சாரம் செய்யவும் உறுதிமொழி ஏற்று தீர்மானம் நிறைவேற்றப்படு கிறது.

கழகத் தலைவர் முதல்வர் தளபதி தலைமையில் திராவிட அரசு மாடல் 2.0 தொடரும். தமிழ்நாடு வெல்லும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிகழ்வில்; ஒன்றிய கழக செயலாளர்கள்: அ. முத்துசாமி,வி.சிவக்குமார், த.ஜெயபாண்டியன், ஆர். நாராயணசாமி, கே.ஆர். ராயர், கே.ஆர்.கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார்,பி.சுப்பிர மணியன், கே. ஆர். தனஞ்செயன், ஆர்.விஜயசுந்தரம், கே. மகேஷ், ஏ.எஸ்.மதியழகன், ஏ.எம்.மதியழகன்,மு. வெற்றிவேல், வி.ஜி.பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.பி.பாலு, பி.சுந்தர பாண்டியன், ஆர்.கலையரசன், எம்.மனோகரன், த.சங்கர், ஆர்.ராஜேந்திரன், கே. நடரா ஜன், ம.சோழன், வி.கோவிந்தசாமி, கடலூர் மாநகர செயலாளர்: கே. எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடரா ஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளைய ராஜா, நகர கழக செயலாளர்கள் த.தமிழ்ச்செல்வன்,

வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: வ.ஞான சேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர். பாலமுருகன்,த.ஜேம்ஸ் விஜயராக வன், ச.கல்யாணசுந்தரம் பா.கோதண்டபாணி, மாவட்ட தொகுதி பார்வையாளர்கள் ஆசிரியர் பி.வெங்கடாஜலபதி,ஆசிரியர் சின்னமணி, பேரூர் செயலாளர்கள்: எஸ்.கணேசமூர்த்தி, கு. வே.ப. ஜெய்சங்கர், ப.மனோகரன், பூ. செல்வகுமார், க.பழனி, தேன் மொழி சங்கர், கே.ஜெயச் சந்திரன், கே.சுரேஷ், இளைஞரணி ஜி.கார்த்தி கேயன், மாணவர் அணி ஆர்.சத்திய நாராயணன், தொண்டர் அணி ஆராமுது,

விவசாய அணி பொ.பன்னீர்செல்வம்,விவசாய தொழிலாளர் அணி ம.ராமசாமி,மகளிர் அணி த.அமுதராணி, மகளிர் தொண்டரணி ப. மனோ ரஞ்சி தம்,பொறியாளர் அணி அப்பு.சந்திரசேகர்,ஆதிதிராவிடர் அணி ஆர்.பரந்தாமன்,சிறுபான்மையினர் எம்.எஸ்.முகமது யூனஸ், வர்த்தகர்அணி ஆர்.ரங்கநாதன்,தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி,விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார்,மீனவர் அணி வீ.செல்வ பாரதி,அயலக அணி விசுராஜ், தொழிலாளர் அணி கி.தண்டபாணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தாணூர். சிவக் கொழுந்து, தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் கோ.பா.கௌதமன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.1.2026) மதுரை மாவட்டம், நாகமலை புதுக்கோட்டையில், கேரளா உயர்நீதிமன்ற நீதியரசர் திருமதி நிஷா பானு அவர்களின் மகன் தயானந்த் கெவின் ராய் – டாக்டர் சரண்யா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, எஸ். இரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், பி.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் பி. வில்சன், சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி, கவிப்பேரரசு வைரமுத்து மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாடிப்பட்டியில் பேரறிஞர் அண்ணா நினைவு தின அமைதிப் பேரணி!

### மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, பிப்.2-

மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் வருகிற மூன்றாம் தேதி வாடிப்பட்டியில் பேரறிஞர் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு அமைதிப் பேரணி நடத்தி அவரது திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளதாக மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி விடுத்துள்ள அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு போதித்தவர், எல்லோராலும் பேரறிஞர் அண்ணா என்று போற்றப் படுபவர், தமிழர்களுக்காகவும், தமிழுக்காகவும் பெரும் தொண்டாற்றிய வருமான அறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு தினத்தை முன்னிட்டு வரும் 03.02.2026 செவ்வாய்க் கிழமை மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாடிப்பட்டி பேருந்து நிலையம் முன்பாக அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்திடும் நிகழ்வு காலை 9 மணி அளவில் நடைபெற உள்ளது. முன்னதாக வாடிப் பட்டி மதுரை மத்திய கூட்டுறவு வங்கி கிளை அலுவலகம் முன்பாக இருந்து அமைதி பேரணி புறப்பட உள்ளது எனவே இந் நிகழ்வுகளில் மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.வுக்கு ட் பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருமான பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலமாக கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அமைச்சர் இ.பெரியசாமி தலைமை!

# திண்டுக்கல்லில் பேரறிஞர் அண்ணா நினைவுநாள் - அமைதிப் பேரணி!

### மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில்குமார் அறிக்கை!

திண்டுக்கல், பிப். 2 -

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:





காஞ்சி தந்த காவியத் தலைவர் தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும், வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர், தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர், பேறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளான 03.02.2026, செவ்வாய்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் கழக துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி, அவர்களின் தலைமையிலும் திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் உணவுத் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி . திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் , வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.காந்திராஜன் ஆகியோரின் முன்னிலையில்; மாநகராட்சி அலுவலகம், மணிக்கூண்டிலிருந்து அமைதிப் பேரணியாகச் சென்று பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படவுள்ளது.

அதுசமயம் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர மேயர், துணை மேயர், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர்கள், பேரூராட்சிமன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர்கள், பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு மற்றும் கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னாள் உள்ளாட்சிமன்றப் பிரதி நிதிகள், கழக அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடி கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் திரளாக கலந்துகொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## தி.மு.க. நெசவாளர் அணி

### திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

**தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!**

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட எ.என். சம்பத் அவர்களுக்குப் பதிலாக **எம்.எஸ். செல்வபாண்டியன்** (3, புதிய காஞ்சிபுரம் சாலை, ஏ.எஸ். நகர், செய்யாறு - 604407, திருவண்ணாமலை மாவட்டம்) அவர்கள் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 31-01-2026.

நன்னியூர் இராஜேந்திரன்
தலைவர்,
தி.மு.க. நெசவாளர் அணி

## தி. மு. க. தொழிலாளர் அணி

### மதுரை மாநகர் மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு மதுரை மாநகர் மாவட்ட தொகுதி மறுசீரமைக்கப்பட்டதால், ஏற்கனவே மதுரை மாநகர் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்ட வரதராஜன், கருணாநிதி, திருமாறன், காமாட்சி, கார்த்திகேயன் ஆகியோருக்கு பதிலாக, **கே. வினோத்குமார்** (8, அன்சாரி நகர் 2வது குறுக்குத் தெரு, மகபூப்பாளையம், மதுரை.), **எஸ். வேல்முருகன்** (3, இளந்தோப்பு 3வது தெரு, கரிமேடு, மதுரை.), **கே. சவரிராயன்** (1, பர்மா காலனி 3வது தெரு, கோ.புதூர், மதுரை.), **கே. பிரபாகரன்** (சி3/1, ஹவுசிங் போர்டு காலனி, ஞானஒளிவுபுரம், மதுரை.) **ஆர். பாலமுருகன்** (2/43, விசுவாசபுரி 2வது தெரு, ஞானஒளிவுபுரம், மதுரை.) மேலும், **ஜெ. சதீஸ் சரவணன்** (32/21, குலமங்கலம் மெயின் ரோடு, செல்லூர், மதுரை - 625002), **வி.சந்திரன்** (262, காந்திபுரம் 4வது தெரு, கோ. புதூர், மதுரை - 6250074) ஆகியோர் மதுரை மாநகர் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்களாகவும், **எம்.செந்தில்குமார்** (21, மணவாளன் நகர், குலமங்கலம் மெயின் ரோடு, செல்லூர், மதுரை - 625002) அவர்கள் துணைத் தலைவராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 31-01-2026.

பிடிசி ஜி.செல்வராஜ்,
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி


பிப்ரவரி 02 2026

17 - ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் : 09.04.1938

மறைவு : 02.02.2009

திரு. வீ.ரங்கநாதன் அவர்கள்

முன்னாள் செஞ்சி ஒன்றிய தி.மு.க.செயலாளர்

என்றும் உங்கள் நினைவுகளுடன்...

R.விஜயகுமார் B.A.,B.L.,

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்

தலைமை செயற்குழு உறுப்பினர், செஞ்சி ஒன்றிய செயலாளர். ( கி )

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்

பீரங்கிமேடு, செஞ்சி-விழுப்புரம் மாவட்டம்.

JN ADS